# தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(07-09-2016 – 11-09-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 06-09-2016

**கடந்த கால வானிலை 02-09-2016 முதல் 05-09-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33-35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 48-70 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 4-8 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 11-09-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 07.09.16 | 08.09.16 | 09.09.16 | 10.09.16 | 11.09.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 2 | 2 | 6 | 8 | 3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 28 | 29 | 29 | 29 | 28 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 19 | 19 | 19 | 20 | 20 |
| மேக மூட்டம் | 8 | 7 | 5 | 7 | 8 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 76 | 78 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 43 | 36 | 38 | 42 | 48 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 9 | 9 | 7 | 6 | 5 |
| காற்றின் திசை | வடமேற்கு | வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு | மேற்கு வடமேற்கு |

**குறுஞ்செய்தி**

- எதிர்வரும் ஐந்து நாட்களில் இலேசான மழை சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், காய்கறி பயிர்கள், வாழை மற்றும் கரும்பு**

**பருவம்: நெல்: தண்டு உருளும் பருவம்**

- கடந்த சில நாட்களாக பெய்த மழையைப் பயன்படுத்தி சம்பா வயல்களை தயார் செய்யவும்.
- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- கொட்டகையின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வதன் மூலம் ஒட்டுண்ணிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி அதனால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.